**10 10 2023** **1240**

செவ்வாய்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திரமோடி ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுடன் இன்று மாலை கலந்துரையாடுகிறார்.
- மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இன்று மொராக்கோ செல்கிறார்.
- மனநல பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிக்க அனைவரும் முன்வர வேண்டுமென்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டுள்ளார்.
- தமிழ்நாட்டில் உள்ள சிறு வணிகர்களுக்கு புதிய வரி நிலுவைத் தொகை சமாதான திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- உலகக்கோப்பை ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், தர்மசாலாவில் தற்போது நடைபெற்று வரும் பங்ளாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து முதலில் பேட் செய்து வருகிறது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுடன் இன்று மாலை கலந்துரையாடுகிறார்.

புதுதில்லியில் மாலை நான்கு மணிக்கு இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலேயே அதிக அளவில் இந்திய பதக்கங்களை குவித்து வரலாற்று சாதனை படைத்துள்ளதாகவும், இது நாட்டு மக்களின் மனங்களில் பெருமிதத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.,

இன்று நடைபெறும் இந்த பாராட்டு கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்கள், பயிற்சியாளர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் அலுவலர்கள், தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என மொத்தம் 107 பதக்கங்களை பெற்று பதக்கப்பட்டியலில் இந்தியா நான்காவது இடத்தை பிடித்தது.

**[]<<<>>>[]**

அரசுமுறை பயணமாக இத்தாலி சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Guido crosetto** -வை ரோமில் நேற்று சந்தித்து பேசினார்.,

இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்த சந்திப்பின்போது, பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டன.

கடல்சார் பாதுகாப்பிலும் இரு நாடுகளின் ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

**[]<<<>>>[]**

ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மொராக்கோ செல்கிறார்.

இந்த பயணத்தின் போது அவர் உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி செலாவணி ஆண்டு கூட்டங்களில் பங்கேற்கிறார்.

இந்த கூட்டத்தில் உலக நாடுகளைச் சேர்ந்த நிதி அமைச்சர்கள் மற்றும் அந்நாடுகளின் மத்திய வங்கிகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்ததாஸூம் இந்த கூட்டங்களில் பங்கேற்கிறார்,

இங்கு நடைபெறும் ஜி-20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் தலைவர்கள் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார்.

நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்தோனேஷியா, மொராக்கோ, பிரேசில், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாட்டு நிதி அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்துகிறார்.

[]<<<>>>[]

இந்தியா வந்துள்ள தான்சானியா அதிபர் டாக்டர் சமியா சுலுஹூ ஹசனுக்கு தில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் இன்று வழங்கியது.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய தான்சானியா அதிபர், முதல் முறையாக தமக்கு வெளிநாடு ஒன்றில் கௌரவ டாக்டர் பட்டம் கிடைத்துள்ளது பெருமிதம் அளிப்பதாகக். கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் இந்தியாவும் - தான்சானியாவும் சிறந்த ஒத்துழைப்பை அளித்து வருவதாகக் கூறினார்.

இந்திய கல்வி நிறுவனங்களில் ஐயாயிரத்துக்கும் கூடுதலான தான்சானிய நாட்டினர் கல்வி பயின்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவுகள் வலுவாக உள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

உலக மனநல நாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்ற வருகின்றன.

இதனையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள செய்தியில், மனநல பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிக்க அனைவரும் உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

இந்தியாவில் 89 சதவீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

எனவே அனைவரும் மன நல ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான வழிமுறைகளை கையாள வேண்டுமென்று மனநல மருத்துவர் ஜி செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செந்தில்குமார்) ---45 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழ்நாட்டில் உள்ள சிறு வணிகர்களுக்கு புதிய வரி நிலுவைத் தொகை சமாதான திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.,

இன்று சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து பேசிய அவர், வணிகர்களின் கோரிக்கையை எற்று 50 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக வணிகம் செய்யும் சிறு வணிகர்களுக்கான வரி முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவதாகக் கூறினார்.

இதன்மூலம் சுமார் 95 ஆயிரம் வணிகர்கள் பயன்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவீத்தார்.

25 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வணிக வரி நிலுவையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக வரி நிலுவையை வசூலிப்பதற்காக புதிய சமாதான திட்டம் அறிமுகப்படுத்துப்படும் என்றும், இது நான்கு மாதங்கள் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவீத்தார்.

பத்து லட்சம் ரூபாய் வரி நிலுவை வைத்துள்ள வணிகர்கள் அதில் 20 சதவீதம் மட்டும் செலுத்தினால் போதும் என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

*(சவுண்ட்பைட் - ஸ்டாலின் ) --38--- செகண்ட்*

[]<<<>>>[]

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், மகளிர் பயன்பெறும் வகையில் மானியத்துடன் கூடிய சமையல் எரிவாயு சிலிண்டர்களை மத்திய அரசு வழங்கி வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு மேலும் 100 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது தங்களுக்கு பெரும் பயனளிப்பதாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - மகளிர் ) ---42 — செகண்ட்*

**[]<<<>>>[]**

இஸ்ரேல் ராணுவத்துக்கும் - பாலஸ்தீன ஹமாஸ் பிரிவினருக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில் இதுவரை ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் தரப்பில் தொள்ளாயிரம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், இரண்டாயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீன தரப்பில் 687 பேர் கொல்லப்பட்டதாகவும், மூவாயிரத்து 726 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிகிறது.

காஸா பகுதியை சுற்றிலும் இஸ்ரேல் படைகள் குவிக்கப்பட்டு, உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்த சண்டையினால் இதுவரை ஒரு லட்சத்து 37 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குத் தேவையான உதவிகளை ஐ நா அமைப்பினர் வழங்கி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சண்டையினால் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் அமைப்பின் இயக்குநர் கத்தரின் ரெசல் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்ளாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்று முன் வரை -27- ஓவரில் -ஒரு- விக்கெட் இழப்புக்கு -158- ரன் எடுத்துள்ளது.

தர்மசாலாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.,

இதையடுத்து இங்கிலாந்து அணி களமிறங்கியது.

இன்று பிற்பகல் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் இலங்கை அணி — பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி ஹைதராபாத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்குகிறது.

***End of News***